# திருமதி சிறிமா இம்மாத இறுதியில் யாழ். விஜயம்

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 9 (12-1-67) இதழ் 338
பராபவ ரமழான் 30 மார்கழி 28 வியாழக்கிழமை

## மகத்தான வரவேற்பளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், வியா.
சமசமாஜக் கட்சியினரின் யாழ்ப்பாணக் கிளையினரின் அழைப்பை ஏற்று எதிர்க் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வருவாரெனத் தெரிய வருகிறது. தேர்தல் பிரசாரங்களில் தற்போது ஈடுபட்டிருப்பதால், தேர்தல் முடிந்ததும், தாம் யாழ்ப்பாணம் வருவதாக, சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையின் அழைப்பை ஏற்று அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார் என மேற்படி கட்சியின் பிரமுகர்களில் ஒருவரான திரு. க. விசுவநாதன் நேற்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.



ஸ்ரீமாவோ யாழ்ப்பாணம் வரும்போது அவருக்கு கட்சியின் சார்பில் மகத்தான வரவேற்பொன்றையளிக்க தமது கிளை தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கிளையின் சமசமாஜக்கட்சியின் அழைப்பை ஏற்றுக்கொண்ட திருமதி ஸ்ரீமா யாழ்ப்பாணத்துக்கு முன்னர் வருவதற்குத் திட்டமிட்டிருந்தபொழுதிலும் அண்மையில் நடைபெற்ற உபதேர்தல்கள் காரணமாக தமது விஜயத்தை அவர் ஒத்திவைத்திருந்தார்.

### மீண்டும் அனுமதி

வண்டத்தரிப்பு, செவ்.
இளவாலையில் இறைச்சிக் கடை நடாத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. முன்பு சிலகாலம் இந்த அனுமதி ரத்துச் செய்யப்பட்டதால் கடை பூட்டப்பட்டிருந்தது.

# 4-வது பல்கலைக்கழகம் கொழும்பில் உதயம்

## "நாம் பின்தங்கியிருப்பது விந்தையாகவிருக்கிறது"

### வேலை அனுபவத் திட்டத்தில் கல்வி மந்திரி

கொழும்பு, புதன்
இயற்கை வளம் நிறைந்த எமது நாடு அந்நிய உதவிகளை எதிர்பார்ப்பது விந்தையாகவிருக்கிறதென்று கல்வி கலாச்சார மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை இன்று கொழும்பில் மாணவர் வேலை அனுபவத்திட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

அமைச்சர் இரியகொல்லை தேசியக் கொடியை உயர்த்தி புதிய திட்டத்தை ஆரம்பித்துவைத்தார். இதில் 25 லட்சம் மாணவர்கள் பங்குபற்றினர்.

திரு. ஐ. எம். ஆர். இரியகொல்லை தொடர்ந்து பேசுகையில், விவசாயத்துறையில் அபிவிருத்தியடையாத காரணத்தினால்தான் எமது நாடு இன்று உணவு நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது என்றும் விவசாயத் தொழிலில் மாணவர்களும் பெற்றோர்களும் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்றும் கூறினார்.

வெள்ளை அறிக்கையின்படி தனியே மாணவர்களுக்கு மட்டுமின்றி, நாடு பொருளாதாரத்துறையில் முன்னேறவும் பல திட்டங்கள் உண்டு' என்றுமந்திரி குறிப்பிட்டார்.

## பொங்கலுக்கு சர்க்கரை: கூப்பனுக்கு ஓர் அவுன்ஸ்

யாழ்ப்பாணம், வியா.
வடமாகாணத்திலுள்ள தனிப்பட்ட கூப்பன் கடைகளிலும் கூட்டுறவுச்சங்கக் கடைகளிலும் ஓர் கூப்பனுக்கு ஓர் அவுன்ஸ் சர்க்கரை வழங்கப்படுவதாக உணவுக்கட்டுப்பாட்டு இலாகா உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கலை முன்னிட்டு எல்லோருக்கும் சர்க்கரை கிடைக்கவேண்டும் என்பதற்காகவே, ஓர் அவுன்ஸ் வீதம் வழங்கப்படுவதாகவும் அதற்குக்கூட வழங்கப் போதிய சர்க்கரை கையிருப்பில் இல்லை என்றும் தெரிவித்தார்.

## "முக்கூட்டு ஒத்துழைப்பு மூலம் உணவுப் பிரச்னைக்கு தீர்வு"

### மன்னாரில் மாணவர் வேலை அனுபவத்திட்டத்தில் பேச்சு

மன்னார், புதன்
"மாணவர் ஆசிரியர் - பெற்றோர் இந்தக் கூட்டு ஒத்துழைப்பு திட்டத்தின் மூலம் நாட்டின் உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியும். இதன் ஆரம்பகட்டமே மாணவர் வேலை அனுபவத் திட்டமாகும்" என்று மன்னார் மாவட்ட கல்வி ஆலோசகர் திரு. வி. நடராசா மன்னார் கான்வன்ட் வீதியில் மாபெரும் சிரமதான வேலை அனுபவத் திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார். சிரமதான திட்டம் மூலம் இப்பகுதி இன்று விழாக்கோலம் பூண்டிருந்தது.

"நாட்டு மக்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் உணவுப் பற்றாக் குறையையும் தீர்ப்பதற்கு மாணவர், ஆசிரியர் பெற்றோர் முக்கிய பங்கு கொண்டு உழைக்க வேண்டும் என்பதற்கு இந்த இயக்கம் மகத்தான வழிகாட்டியாகும். மாணவர்களின் கல்வியில் நிலத்தை பண்படுத்துவது போன்ற உடல் உழைப்பு திட்டங்கள் அவசியம் இடம் பெறவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் குருங்கள் வீதி சாலைப் பணியிலும், வேசாலையில் மீன்பிடிப்பத்திற்கு உதவியாக ...

## தேசிய கல்விச்சபை செய்துள்ள முடிவு

கொழும்பு, புதன்
இலங்கையின் நான்காவது பல்கலைக்கழகம் கொழும்பில் திறக்கப்படவிருக்கிறது. 'கொழும்பு பல்கலைக்கழகம்' எனப் பெயரிடப்படவிருக்கும் இப் பல்கலைக்கழகத்தில் சகல பிரிவுப் போதனைப் பிரிவுகளும் இருப்பினும் விஞ்ஞான போதனைப் பிரிவே முக்கிய இடம்பெறும்.

கலைப்பிரிவு மாணவர்கள் வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக்கழகங்களுக்குத் திருப்பிவிடப்படுவார்கள். குதிரைப்பந்தயத்திடலில் பல்கலைக்கழக விடுதி அமைக்கப்படக்கூடுமென்றும் தெரிகிறது. கொழும்பு பல்கலைக்கழகம் அமைப்பது பற்றிய விபரங்களை தேசிய கல்விச் சபை ஆராய்ந்துவருகிறது.

தேசிய கல்விச்சபை கொழும்பில் பல்கலைக்கழகம் திறவவேண்டுமென்று முடிவுசெய்தது.

### கணேசையர் ஞாபக விழா

யாழ்ப்பாணம், வியா.
வித்துவசிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் ஞாபகார்த்த விழா சனிக்கிழமை மாலை வருத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். காணி, நீர்ப்பாசன மின்சார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மலர்துசொற்பொழிவுகளும் கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

தல், மீன் தரம் பிரித்தல் வெட்டியில் அடைத்தல் முதலிய வேலைகளையும் ஆசிரியர்களுடன் மேற்கொண்டனர். அடம்பனில் 2 ஏக்கர் காணி விவசாய அபிவிருத்திக்குத் திருத்தப்பட்டது. கல்வி ஆலோசகருக்கு உதவியாக பாடசாலை பரிசோதகர்களான திரு. எம். எம். மொக்குன், திரு. ஏ. சிவகுரு ஆகியோர் மாணவ ... வேலையில் உதவியளித்தது.

## புலோப்பளையில் திருடர் கோஷ்டி அட்டகாசம்

பளை, புதன்
புலோப்பளை பகுதியில் கொள்ளையடிக்கச் சென்ற திருடர் கோஷ்டி, ஒரு வீட்டில் இளம்பெண்ணின் புகைப்படத்தையும், அப்பெண்ணைப்பற்றிய விபரங்கள் கொண்ட அடையாள அட்டையையும் திருடிச் சென்றுள்ளது.

புலோப்பளையைச் சேர்ந்த மிக்கேல் பிலிப்பையா வீட்டில் மேற்படி சம்பவம் நடந்துள்ளது. அவர் வீட்டிலுள்ள 1500 ரூபா பெறுமதியான நகைகளையும் திருடிச்சென்றுள்ளனர். மக்கோ, பேசேவ் என்பவர்களின் வீட்டில் சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர். சிமான்பிள்ளை செவத்தி யாம்பிள்ளை என்பவரது வீட்டில் 500 ரூபா பெறுமதியான நகைகளையும் வேறும், அல்பிரட் என்பவரது வீட்டில் 600 ரூபா பெறுமதியான நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

தங்கள் கைவரிசையைக் காட்டியபின் திருடர்கள் நகைகள் இருந்த பெட்டிகளை வீதியில் வீசிவிட்டுச் சென்றுள்ளனர். இப்பெட்டிகளை மறுநாள் காலை கண்ட பின்தான், தங்கள் வீடுகளில் திருட்டு நடைபெற்றிருப்பதாகத் தெரியவந்தது.

பொலிசார் இடங்களை வந்து பார்வையிட்டனர். இதே இரவு, அல்லிப்பளை, இளாலி, இராமவிலில் திருட்டு முயற்சி நடைபெற்றதாகத்தெரியவருகிறது.

# டட்லி கனடா விஜயம்

கொழும்பு, புதன்
பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா விரைவில் கனடாவுக்கு விஜயஞ்செய்யவிருக்கிறார். மொன்றியலில் நடைபெறவிருக்கும் சர்வதேசக் கண்காட்சி சந்தையில் இலங்கையின் 'அரங்கை' திறந்துவைப்பதற்காகப் பிரதமர் ஜூன் மாதத்தில் கனடா செல்வார்.



இச் செய்தியை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு இன்று வெளியிட்டது.

கனடாவுக்கு செல்லும்சந்தர்ப்பத்தைப் ...

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனோய்க்கு அருகே

# 2 ராணுவ இலக்குகளை அமெரிக்க துருப்புகள் பொறுப்பேற்றனர்

சைகோன், ஜன. 11

வடக்கு வியட்நாம் தலைநகர் ஹனோய்க்கு அருகே இரண்டு இராணுவ இலக்குகளை அமெரிக்கா பொறுப்பேற்றுள்ளதாகத் தெரியவருகிறது இந்த இலக்குகள்மீது குண்டுவீச்சு நடத்த வேண்டாமென்று உத்தரவிட்டுள்ளது

இன்று காலையில் கிடைக்கப்பெற்ற கடைசிச் செய்திகளின்படி ஹனோய்க்கு அருகாமையிலுள்ள லாறி டிப்போ ஒன்றையும் "ரயில்வேயாட்" ஒன்றையும் அமெரிக்கத் துருப்புகள் பொறுப்பேற்றுவிட்டதாகத் தெரியவருகிறது.

இந்த இலக்குகளின் மீது குண்டுவீச்சு நடத்துவதற்கு முன்னர் உத்தரவிடப்பட்டிருந்த பொழுதிலும் நிலைமையில் மாற்றம் காரணமாக உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபொழுதிலும் புதிய நடவடிக்கை குறித்து உத்தியோகபூர்வமான விளக்கமோ அல்லது அறிவிப்போ வெளியிடப்படவில்லை.

## 20 வயது இளைஞனுக்கு மரணதண்டனை

சைகோன், ஜன. 11

சில தினங்களுக்கு முன்னர் சைகோனில் தென் வியட்நாம் தேசியசபையின் முக்கிய அங்கத்தவர் ஒருவரை சுட்டுக்கொலை செய்த இருபது வயது இளைஞனுக்கு தென்வியட்நாம் இராணுவ நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

இந்த இளைஞன் கைக்குண்டு வீசி அந்த சபையின் அங்கத்தவரை கைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலைசெய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. கொலைசெய்ததை இவர் ஒப்புக்கொண்டுள்ளார். இந்த இளைஞன் வியட்காங்கியின் ஏஜண்ட் என்று அறிவிக்கப்பட்டது.

## "குண்டு வீச்சை நிறுத்துக"

### யுதாண்ட் மீண்டும் விண்ணப்பம்

நியுயோர்க், ஜன. 11

வடக்கு வியட்நாமில் அமெரிக்கா முன் நிபந்தனையற்ற முறையில் குண்டு வீச்சை நிறுத்தாதவரை சமாதானப் பேச்சுக்கு இடமில்லை என்று ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நியுயோர்க்கில் நேற்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பேசுகையில் தான் யுதாண்ட் மேற்கண்டவாறு கூறினர்.

முன்நிபந்தனையற்ற முறையில் அமெரிக்கா குண்டு வீச்சை நிறுத்தினால் மற்றைய சாராரின் இராணுவ எதிர்ப்பு நடவடிக்கைகள் ஓரளவு குறையலாம் என்று யுதாண்ட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யுதாண்ட் இப்படி மீண்டும் வலியுறுத்திவருவது வாஷிங்டன் வட்டாரங்களிடையே கவலையை ஏற்படுத்தி வருவதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய பாகிஸ்தான்

## கிழக்கு எல்லை பதற்றநிலை

### இராணுவத் தளபதிகள் ஆராய்ந்தனர்

டாக்கா, ஜன 11

இந்திய-பாகிஸ்தான் கிழக்கு எல்லையில் நிலவும் பதற்றநிலை குறித்து இந்திய-பாகிஸ்தான் இராணுவத் தளபதிகள் நேற்று இங்கு சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

கிழக்கு எல்லையில் இருதரப்பினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடாதென்று இக்கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. இருபகுதியினரும் மீண்டும் சந்திப்பதற்கு இணங்கியுள்ளனர்.

## 54-வது நாள் உண்ணு விரதம்

புதுடில்லி, ஜன. 11

இந்தியா முழுவதிலும் பசு வதையைத் தடை செய்யவேண்டும் என்று கோரி, பூரி மடத்து சுவாமிகள் ஜகத்குரு சங்கராச்சாரியார் இன்றுடன் 54வது நாளாக உண்ணு விரதம் இருந்துவருகிறார்.

## "உறவுகள் பாதித்தால் நாம் பலவீனமடைவோம்"

—இந்திரா

### 'மனக்கசப்பை மறந்து ஒத்துழைக்க முன்வருக'

—ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, ஜன 11

இந்திய-பாகிஸ்தான் உறவுகளில் அபிவிருத்தி ஏற்படாவிட்டால் காலப்போக்கில் இரு நாடுகளும் பலவீனமடைந்து, நாடுகளின் முன்னேற்றமும் தடைப்பட்டுவிடுமென்று இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி எச்சரிக்கை செய்துள்ளார்.

நேற்றிரவு இந்திய வானொலியில் பேசுகையில் தான் பிரதமர் இந்திரா மேற்கண்டவாறு கூறினர்.

திருமதி இந்திரா காந்தி தொடர்ந்து பேசுகையில் இந்திய-பாகிஸ்தான் மக்கள் பல விஷயங்களில் ஒற்றுமையுள்ளவர்கள் என்றும் இரு நாட்டு மக்களும் ஒத்துழைத்து நாட்டை முன்னேற்றத் தலைவர்களிடையே நல்லுறவு ஏற்படவேண்டுமென்றும் கூறினர்.

அமரர் சாஸ்திரி பற்றி அவர் குறிப்பிடுகையில் சமாதானத்துக்காக உழைத்த ஒரு வீரரென்றும், சாஸ்திரியைப் போல, டாஷ்கண்ட் பிரகடனமும் ஓர் அமைதிச் சின்னமாகவிளங்குமென்றும் கூறினர்.

ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நல்லுறவு ஏற்படவேண்டியது அவசியமென்றும், கடந்தகால மனக்கசப்புகளை மறந்து இருநாடுகளும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சக்ளா, நேற்று ஒரு வைபவத்தில் பேசுகையில் ஒத்துழைத்து முன்னேறுவதற்கு பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

இந்திய-பாகிஸ்தான் உறவில் புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பிக்கட்டுமென்றும் அவர் வாழ்த்தினர்.

### மின்சார வேலை

மண்டைதீவு, புங்குடுதீவு பகுதிக்கு மின்சாரம் வழங்கும் வேலை ஆரம்பமாகியுள்ளது. தற்போது மின்சாரக் கம்பங்கள் நாட்டப்படுகின்றன. முற்பணம் கட்டியவர்களுக்கே முதலில் மின்சாரம் வழங்கப்படுமெனத் தெரிகிறது.

சீன தெற்கு - வடக்கு பகுதிகளிடையே

## போக்கு வரத்துகள் தடைப்பட்டன

### சீன அதிபரின் மனைவியை செங்காவலர் கடத்தினராம்

ஹொங்கொங், ஜன. 11

தொழிலாளர் வேலைநிறுத்தம், செங்காவலருக்கு எதிரான நடவடிக்கைகள் காரணமாக சீனவின் வடக்குக்கும் தென்பகுதிக்குமிடையே பிரதான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன என்று இங்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனவில் இப்பொழுது நிலவும் குழப்பநிலை காரணமாக பல இடங்களிலும் தொழிலாளர்—செங்காவலர் மோதல்கள் தலைதூக்கி வருவதாகச் சொல்லப்படுகிறது.

சீனவில் தொழிலாளர் வேலைநிறுத்தம் நீடிக்கிறது என்றும் நாங்கிங்கில் தொழிலாளர் உள்ளிட்ட ஐந்துலட்சம்பேர் மா-சே-துங்குக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாகவும் பீகிங்கிலுள்ள செக்கோஸ்லோவாகிய நிருபர் அனுப்பியசெய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய நிருபர் அனுப்பிய செய்தியில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தைத் தாக்குவதில் செங்காவலர் ஈடுபட்டனர் என்றும் ஆனல் முயற்சி பலிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சீன அதிபர் லியு-ஷி-சாவின் மனைவியை செங்காவலர் கடத்திச் சென்றுவிட்டனர் என்றும் அவளிடமிருந்து பலவந்தமான வாக்குமூலங்கள் பெறப்பட்டதாகவும் பீகிங்கிலுள்ள ஜப்பானிய நிருபர் செய்தி அனுப்பியுள்ளார்.

### என்ன நடக்கிறது?

நேற்று சுமார் ஆயிரம் செங்காவலர் அதிபர் லியு-ஷி—சா இல்லத்தின் முன் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும் பாதுகாப்புப்படையினர் வந்து கேட்டுக்கொண்டதன் பின்னரே அவர்கள் சென்றதாகவும் தெரிகிறது.

லியு-ஷா-சி மற்றும் கம்யூனிஸ்ட்கட்சிக் காரியதரிசி ஆகியவர்களுக்கெதிராகவே தங்கள் இயக்கத்தை நடத்துமபடிபிரதமர் சூ—என்—லாய் செங்காவலரைக் கேட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. மற்றொருசெய்தி சூ—என்—லாய்க்கு எதிராகவும் செங்காவலர் ஆர்ப்பாட்டம் நடத்துவதாகக் கூறுகிறது.

பீகிங்கில் பொலிசார் செயலற்றுப் போய்விட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

சீனவின் நிலைமை ஒரே குழப்பமாக இருப்பதாகவும் எதுவும் தெளிவாகத் தெரியவில்லையென்றும், அங்கிருந்து கிடைக்கும் தகவல்களிலிருந்து தெரிகிறது.

### ஒப்படைத்தார்

யாழ்ப்பாணம், வியாவேலணையைச் சேர்ந்த மு. சி. சிற்றம்பலம்என்பவர் தனது தாயாரின் பங்கீட்டுப் புத்தகத்தை தீவுப்பகுதி காரியாலயத்திடம் ஒப்படைத்தார்.

## திடீர் புரட்சி திடீரென்றே வந்தது

### புரட்சிக்கும் தமக்கும் தொடர்பில்லை என்கிறார் சுகர்ணோ

ஜாகார்த்தா, ஜன. 11

'1965-ம் ஆண்டு திடீர் புரட்சிக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை. திடீர் புரட்சி திடீரென்றே வந்தது" என்று இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோ தெரிவித்துள்ளார்.

1965-ம் ஆண்டு ஏற்பட்ட திடீர் புரட்சிக்கும் இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார முட்டுக்கட்டைகளுக்கும் சுகர்ணோ காரணமாகவிருந்திருக்கிறார் என்றும் இவற்றுக்கு அவர் விளக்கம் கொடுக்க வேண்டுமென்றும் இந்தோனேஷிய மக்களும் மாணவர்களும் கோரியிருந்தனர். இதனைத் தொடர்ந்து இந்தோனேஷிய ஆட்சிச் சபையான மக்கள் ஆலோசனை காங்கிரஸுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதிபர் சுகர்ணோ சமர்ப்பித்துள்ள அறிக்கையில் 1965-ம் ஆண்டு திடீர் புரட்சிபற்றி தமக்கு எதுவுமே முன்னதாகத் தெரியாது என்றும் திடீர் புரட்சி ஏற்பட்ட பின்னர் தாம் அதுபற்றி அறிந்ததாகவும் புரட்சிக்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார முட்டுக்கட்டைக்கும் தாம் பொறுப்பல்ல என்று சுகர்ணோ தெரிவித்துள்ளார்.

### தீர்மானம்

ஆச்சுவேலி, புதன்

"தேசவழமைச் சட்டத்திலுள்ள கொடுமைகளை ஒருக்கவேண்டும் என்று அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இவ்வேளையில் கைத்தறிக்குத் தேவையான உபகரணங்களை சேகரித்து அவற்றைத் தனியார் வர்த்தக நிறுவனங்களில் கூடுதலான விலைக்கு அதிகமாக விற்பனைசெய்வதால் கைத்தறியாளர்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். ஆகவே இதனை உடன் கட்டுப்படுத்தி நெசவாளர் யூனியன் மூலம் குறைந்த விலைக்கு வாங்கக் கூடியதாகச் செய்யவேண்டும்."

இவ்வாறு ஒழுங்கு வண்ணார் பண்ணையில் நடைபெற்ற விழாவில் அரசாங்க அதிபரைக் கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. விழாவுக்கு திரு. வி. கார்த்திகேசு தலைமை வகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சந்தேகம் உண்மையை மறைக்கின்றது. இதனால் நண்பர்கள் விரோதத்திற்குள்ளாகின்றனர். சந்தேகம் நண்பர்களையும் இழக்கச்செய்கின்றது. சந்தேகத்திலிருந்து ஒருவன் விலகுவானானால் அவன் வாழ்வில் முன்னேற்றமடைவதுடன் சிறந்த மனிதனாகவும் விளங்குவான். அறியாமைதான் சந்தேகத்தின் அத்திவாரம். சந்தேகம் ஒருவனது வாழ்வில் குறுக்கிடுமானால் அவன் நம்பிக்கை இழந்தவனாவான்.

— சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Pox 49 JAFFNA
Telegram EELANADU Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ வருடு மார்கழி மீ 28 (12-1-67)


## நவசீனாவில் நடப்பதென்ன?

நவசீனாவில் என்ன நடக்கிறது? சீனாவிற்கு வெளியே இருந்து, சீனாவிலிருந்து கிடைக்கும் தகவல்களை ஆதாரமாகக்கொண்டு வெளிவரும் செய்திகள், சீனாவில் குழப்பம் நிலவுவதாகவும் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டிருப்பதுபோல் தோன்றுவதாகவும் தெரிவிக்கின்றன. முதலாளித்துவ சாயலை முற்றாக ஒழித்துக்கட்ட புரட்சிப்படை தோன்றி செயல்புரிகிறது என்று சில வானொலியும் சிலப் பத்திரிகையும் முதற் தடவையாகத் தகவல் வெளியிட்டுள்ளது.

சீனாவில் தலைவர் மா-சே-துங்கிற்கு எதிர்ப்புத் தோன்றியிருக்கிறதென்ற செய்தியும், மற்றும் அங்கு தலைமைப் பதவிப் போராட்டம் ஆரம்பித்திருக்கிறதென்ற செய்தியும் உண்மை இல்லை என்று கூறமுடியாது. சீன அரசாங்க அதிபர் லியு-ஷா-சீயை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தின செங்காவலர், அவரது மனைவியைக் கடத்திச் சென்றுவிட்டனரென்றும் தொழிலாளருக்கும் செங்காவலருக்குமிடையில் கைகலப்புகள் நடைபெற்று வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

ஜப்பான், ஹாங்காங் முதலிய இடங்களிலிருந்து வெளிவரும் செய்திகள் மட்டுமல்லாது சோவியத் யூனியன் போன்ற சோஷலிஸ்ட் நாட்டிலிருந்தும் சீனா பற்றிக்கிடைக்கும் செய்திகள், சீனாவில் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன. மா-சே-துங்கைக் காணவில்லையென்றும் சில செய்திகள் கூறுகின்றன. சீனா பற்றி சீனாவுக்கு வெளியிலிருந்து கிடைக்கும் செய்திகள் பலமிகைப்படுத்தப்பட்டவையாக இருக்கலாம். ஆனால் அவற்றில் உண்மை இல்லையென்று கூறிவிட இடமில்லை.

நவசீனாவில் எதுவும் நடக்கும்; நடக்கட்டும், எப்படியும் நடக்கட்டும்! நமக்கென்ன என்று நம்மில் சிலர் நினைக்கலாம். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது தமிழ்ப் பழமொழி. நமக்கு அரிசி தந்து கொண்டிருந்த பர்மாவும் தாய்லாந்தும்கூட நமக்குத் தேவையான அரிசியை வாங்கிட தரமுடியாதநிலையிலிருப்பதாகக் கைவிரித்துவிட்டன. நவசீனாவோ அரிசி தர ஒப்புக்கொண்டிருக்கிறது; தந்து கொண்டிருக்கிறது. சீனா அரிசியை இலவசமாகத் தரவில்லையே என்று கேட்கலாம். நமது ரப்பரை வாங்கிக்கொண்டுதான் அது நமக்கு அரிசி தருகிறது. ஆனாலும் வெளிமார்க்கட்டில் ரப்பர் விலை வீழ்ச்சியடைந்திருக்கையில் நமது ரப்பரை சிறிது கூடுதல் விலை கொடுத்து வாங்குவதற்கு சீனா ஒப்புக்கொண்டிருப்பதும் அரிசி தட்டுப்பாட்டைச் சாக்காகவைத்து 'யானை விலை, குதிரை விலை' சொல்லாமல் அரிசிதர ஒப்புக்கொண்டதும் பெரிய காரியமே. சீனாவுக்கு உள்நோக்கம் வேறு ஏதாவது இருக்கலாம் என்று சிலர் கூறக்கூடும்; அது வேறு விஷயம். நாம் முழுப் பட்டினி கிடக்காமல் நமது உயிரைப் பிடித்துவைத்திருக்கும் நவசீனாவில் அமைதி நிலவவேண்டுமென்றும் அங்கு உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டுமென்றும் நாம் விரும்புவதும் எதிர்பார்ப்பதும் 'சுயநலம்' தான். சுயநலத்துக்காகவாவது மற்றவர் நல்வாழ்வு வாழவேண்டுமென விரும்புவதில் தவறில்லை.

சீனா நமக்கு அரிசி தருவது ஒருபுறமிருக்கட்டும். ஆசியாவின் மிகப்பெரிய நாடு நவசீனா. ஜனத்தொகையில் உலகிலேயே முதன்மை வகிப்பதும் நவசீனாதான். உலகின் அமைதி நிலவுவதற்கும் சமாதானம் ஏற்படுவதற்கும் நவசீனாவின் பொறுப்பும் கடமையும் பங்கும் அதிகம் உண்டு. இதனால் தான் நவசீனாவுக்கும் ஐ.நா.வில் அங்கத்துவமளிக்கப்படவேண்டுமென்று நாம் வலியுறுத்திவருகிறோம்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் தகராறு இருந்த போதிலும், சீனாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே கம்யூனிஸ சித்தாந்தம் பற்றித் தோன்றிய கருத்துவேற்றுமை பெரிதாக முற்றி இருநாடுகளுக்கிடையிலும் கைகலப்பு ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளபோதிலும் நிலப்பரப்பிலும் ஜனத்தொகையிலும் முதன்மையாக விளங்கும் சீனா முன்னேற்றமடைய வேண்டுமென்பதே நமது விருப்பம்.

சீனாவில் என்ன நடந்தாலும் சீன மக்களிடையே பிளவையும் வேற்றுமையையும் ஏற்படுத்தக் கூடிய எதுவும் நடைபெறுவது நல்லதல்ல. பிறர் கேலிசெய்யக்கூடிய முறையில் 'புரட்சி' என்ற சொல்லில் எதுவும் நடைபெறவும்கூடாதென்பதே உலகத்தின் விருப்பமுமாகும்.

### மாணவர் சிரமதானம்

முருங்கன், புதன்

வங்காலை வீதிகள் கிரைவல் மாணவர்களின் சிரமதானத்தின் மூலம் திருத்தப்படும். சிரமதானத்திற்கென அரசாங்கம் இரண்டு மாட்டு வண்டி நாட்களை லீவாகக் கொடுத்துள்ளது.

# ஸ்ரீமதி இந்திராவின் தமிழ்நாடு தேர்தல் சுற்றுப்பயணம்

## எதிர்க்கட்சியினரையே கவர்ந்த கவர்ச்சிப்பேச்சு

தமிழ்நாட்டில் தனது மூன்றுநாள் தேர்தல்சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு திரும்பிவிட்டார், இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி. சென்ற இடங்களிலெல்லாம் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டபோதிலும், சில இடங்களில் ஏற்பட்ட எதிர்ப்புகளையும் சமாளிக்கவேண்டியநிலைமை ஸ்ரீமதி இந்திராவுக்கு தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்தது. அவர், பிரதமர் பதவியை ஏற்றபின்னர் நாட்டில் ஏற்பட்ட பலவித பிரச்னைகளையும், சங்கடங்களையும் துணிச்சலுடன் ஏற்று, சமாளித்திருக்கிறபோது தமிழ் நாட்டில் நடந்த சிறு ஆர்ப்பாட்டங்களெல்லாம் அவருக்கு ஒரு 'சலசல'ப்பு என்றே சொல்லலாம்.

### கோலாகல வரவேற்பு

இந்திராவின் தமிழ்நாட்டுச் சுற்றுப்பிரயாணம் முழுவதிலும் சென்னை முதன்மந்திரி ஸ்ரீ பக்தவத்சலமும் சென்றிருந்தார்.

கோயம்புத்தூரில் இந்திராவுக்கு கோலாகலமான வரவேற்புஅளிக்கப்பட்டது. இந்த வரவேற்பில் மாதர்கள் உற்சாகமாகக் கலந்து கொண்டார்கள். பின்னர் இரவு நடந்த பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமதி இந்திரா உரை நிகழ்த்தினார்.

"தேசத்தை எதிர்நோக்கியிருக்கும் பலவேறு பிரச்னைகளைச் சமாளிக்க நிரந்தரமானதும், பலம்வாய்ந்ததுமான அரசாங்கம் தேவை. இதைக் காங்கிரஸ் கட்சியால்தான் அமைக்கமுடியும். எதிர்க்கட்சியினர் செய்யமுடியாத திட்டங்களைப் பற்றித் தீவிரமாகப் பேசிவருகிறார்கள். இது மக்களை ஏமாற்றும் தந்திரம்" —இப்படி இரத்தினச் சுருக்கமாக இப்பிரமாண்டமான கூட்டத்தில் ஸ்ரீமதி இந்திரா காந்தி உரைநிகழ்த்தியது யாவரையும் கவரக்கூடியதாக இருந்தது.

கோயம்புத்தூர் விமான நிலையத்தில் பிரதமர் இந்திராவுக்கு டிராக்டர் ஒன்று பரிசாகக் கொடுக்கப்பட்டது. கோவை தொழிலதிபர் இதை அவரிடம் வழங்கினார்.

### மாணவர் ஆர்ப்பாட்டம்

ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு சென்னை சர்வகலாசாலை நூற்றாண்டு விழாவில் அளிக்கப்பட்ட ஒருவரவேற்பின்போது மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து கூக்குரலிட்டனர். "இந்தி ஒழிக" என்று மாணவர்கள் கத்தினார்கள். துணைவேந்தர் லட்சுமணசாமி முதலியார் மாணவர்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து அமைதியேற்பட்டது. இடத்துக்குத் தக்கபடி சூழ்நிலைக்கேற்றபடி பிரதமர் இந்திரா பேசுவதில் வல்லவரென்பதை இக்கூட்டத்தில் காட்டிவிட்டார்.

எதிர்த்த மாணவர்களையே கவர்ந்துவிட்ட பிரதமர் இந்திராவின் உரை இது தான்:

### இந்திராவின் கவர்ச்சிப் பேச்சு

"நம்மிடையே சில கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். அதை நான் மறைக்க விரும்பவில்லை. இந்தியாவின் தேசத்தில் கடுந்த வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இதனால் மாணவர் ஆர்ப்பாட்டம்செய்கின்றனர். மாணவர் ஆர்ப்பாட்டம் இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கும் நடக்கிறது. மாணவர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு கொள்கையே காரணம் என்று கூறுகிறார்கள். அது தவறு. மாணவர்களுக்கு உரிய தேவைகள் அதிகரித்து வருகின்றன. எதையும் ஒழிக்க விரும்பக் கூடாது. 'ஒழிக, ஒழிக' என்று கூறுகிறீர்கள். 'வாழ்க, வாழ்க' என்று கூறுங்கள். உங்கள் மொழியை வளர்க்க இந்தி மொழியை ஒழிக என ஏன் இடுகிறீர்கள்? உங்கள் மொழியை வாழ்க என வாழ்த்துங்கள். உங்கள் மாநிலத்தில் மட்டும் உங்கள் மொழியை வளர்த்தால் போதாது. மற்ற மாநிலங்களிலும் அதனை வளர்க்க உழைக்க வேண்டும்" திருச்சியிலும், தஞ்சாவூரிலும் இரு பொதுக் கூட்டங்களில் பிரதமர் பேசினார் திருச்சியிலிருந்து தஞ்சைக்கு சுமார் 35 மைல் தூரம் காரில் அவர் சென்றார். ரஸ்தாவுக்கு அருகிலுள்ள கிராமங்களில் மக்கள் இந்திரா சென்றபோது உற்சாகமாக ஆரவாரம் செய்தனர்.

ஸ்ரீமதி இந்திரா கலந்து கொண்ட எல்லாப் பொதுக் கூட்டங்களிலும் இந்திய மாதர்களை அவர் பாராட்டினார். எதிர்காலம் மாதர் கையில்தான் தங்கியிருக்கிறதென்றும், குழந்தைகளை வீரர்களாக வளர்க்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அநேக இடங்களில் பிரதமரின் பேச்சை முதல் மந்திரி மொழி பெயர்த்தார். தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு இந்திரா பெங்களூருக்குத் திரும்பினார்.

எதிர்க் கட்சியினரையே தன் கவர்ச்சிப் பேச்சால் தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் போது ஸ்ரீமதி இந்திரா கவர்ந்து விட்டார் என்றே சொல்லலாம்.

# மரக்கறி தட்டுப்பாடு

மார்கழி, தை மாதங்களில் யாழ்ப்பாணத்தில் மரக்கறித் தட்டுப்பாடு ஏற்படுவது வழக்கம். இக்காலங்களில் கத்தரிக்காய், முருங்கைக்காய் முதலிய முக்கியமான காய்கறி உணவு மிகவும் அபூர்வமாய்ப் போய் விடும். ஆனால் இத்தட்டுப்பாடும் திண்டாட்டமும் உண்மையில் பார்க்கப்போனால் ஏற்படவேண்டிய அவசியமில்லை.

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் —முக்கியமாக புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் சேனைவிவசாயம் செய்யும் மக்கள் வெண்டிக்காய், புடலங்காய், பீர்க்கங்காய், பூசணிக்காய் முதலிய பலவிதமான மரக்கறிகளை உற்பத்திசெய்கிறார்கள். தென்னிலங்கையில் ஏராளமான மரக்கறி பழங்கள் உற்பத்தியாகின்றன. இந்த மரக்கறி வகையெல்லாம் யாழ்ப்பாணம் வருவதற்கு என்ன தடையிருக்கிறது?

### நாட்டிலும் நகரிலும்

தென்னிலங்கைக் கரையோரமாக ஒருவர் பிரயாணம்செய்யும்போது தெருவோரமாக இருக்கும் சின்னஞ்சிறு கடைகளில் சேனைகளில் வளரும் பச்செனவு நிறைந்த காய்கறிகளை ஏராளமாகக் காணலாம். வன்னிப் பகுதிகளிலும் இப்படித்தான். காடு வெட்டிய காணிகளுக்கு நடுவில் புடலும், பாவலும், பூசினியும், பீர்க்கும் தாராளமாக வளர்வதைக் காணலாம்.

இந்த மரக்கறிகள் யாவும் அந்தந்த இடங்களில் தேடுவாரற்றுக் கிடக்கின்றன என்று அறிகிறோம்.

ஒருபகுதியில் மரக்கறித் தட்டுப்பாடு. இன்னொரு பகுதியில் மரக்கறிகள் ஏராளம். வாங்குவதற்கு ஆளில்லை.

இந்த விநோதமான நிலைமையைத் தவிர்ப்பதற்காகத்தான் அரசாங்கம் விற்பனவு வசதி இலாகா என்ற 'மார்க்கெட்டிங் டிபார்ட்மெண்ட்'டை சிருஷ்டித்தது. இந்த இலாகா என்ன காரியங்களை சாதித்துவருகிறதென்பது சர்ச்சைக்குரிய விஷயமாகும்.

கொழும்பு மாநகரசபை வட்டாரத்துக்குள் மட்டும் விற்பனவு வசதி இலாகா பலபல சிறுகடைகளைத் திறந்து ஆங்காங்கே பொது மக்களுக்குத் தேவையான சாமான்கள் யாவற்றையும் மலிவுவிலைக்குக் கொடுத்து வருகிறது. இந்த மலிவு விலைகளைப் பற்றிய விளம்பரங்களை அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கும்போது பிற ஊர்களில் இருப்பவர்களுக்கு மனம் கொதிக்கிறது. கொழும்பில் ஒரு றாத்தல் கத்தரிக்காய் 15 சதமென்று பத்திரிகை விளம்பரம் கூறும்போது, யாழ்ப்பாணத்தில் 80 சதம் கொடுத்து வாங்கும் ஏழை படும்பாடு எப்படியாயிருக்கும்?

யாழ்ப்பாணத்தில் மரக்கறி முதலிய அன்றாட சமையல் சரக்குகள் விற்பனையாகும் இடம் பெரியகடை. ஆனால் இந்தப் பெரியகடையில் ஒரு விற்பனவு வசதி இலாகாவின் கடை இல்லாதது பெரும் ஆச்சரியமானதல்லவா இருக்கிறது!

—வழிப்போக்கன்

### காவலில் அனுமதிக்கப்பட்டவர் மாலையில் காணவில்லை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் மாலை சித்தசுவாதீனமற்றதால் ஏற்பட்ட காயங்களுக்குசிகிச்சை அளிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட ஒருவர் மாலையில் ஆஸ்பத்திரியிலிருந்து காணாமற்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நல் ஊரைச் சேர்ந்தவரும் ஆசிரியத்தொழில் பார்த்து வருபவர் எனக் கூறப்படுபவருமான திரு. ஜி. என். நடராஜன் என்பவரே இவ்வாறு ஆஸ்பத்திரியிலிருந்து காணாமற்போன நோயாளி என அறியப்படுகிறது. இது சம்பந்தமாக ஆஸ்பத்திரி அதிகாரிகள் பொலிஸாரிடம் அறிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்ப்பு ஒத்திவைப்பு

சாவகச்சேரி, புதன்

கிளிநொச்சிப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த வட்டக்கச்சி என்னுமிடத்தில் இவர் ஆனந்தம் வீதியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் சரவணமுத்து என்பவருடைய பசுமாடு ஒன்றை யாரோ திருடியதாகக் கிளிநொச்சிப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து கிளிநொச்சிப் பொலிஸார் ராமன் செல்லையா, தில்லைக் கணேசன் ஆகிய இருவரும் சம்பந்தப்பட்ட பசுமாட்டின் கழுத்தை வெட்டி அம்மாட்டின் இறைச்சியை வெட்டும் போது கைதுசெய்து சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ரூபேட் சில்வா முன்னிலையில் ஆஜர்செய்தார்.

சந்தேக நபர்கள் இருவரும் மாட்டை வெட்டியதற்குத் தாம் குற்றவாளிகளென தெரிவித்ததைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் அவ்விருவரையும் தலா ரூபா 100 பிணையில் செல்ல அனுமதித்து தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 14-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## வீதிதிருத்த வேலை பூர்த்தி

சங்கானை, புதன்

மானிப்பாய் கிராமசபை வட்டாரத்திற்குட்பட்ட மதவடி, ஒழுங்கையைப் புதிதாக ரோட்டாகத் திருத்தி அமைக்கும் வேலை பூர்த்தியாகிவிட்டது. 15-ம் வட்டார அங்கத்தவர் திரு. க. சதாசிவத்தின் முயற்சியால் இத்திருத்தம் கூடிய விரைவில் முடிந்துள்ளது. வெள்ளவாய்க்காலாகவும் மக்கள் பாவனைக்கு உதவாததுமாக இருந்த இப்பாதை பொது மக்கள் பாவனைக்கு ஏற்றவகையில் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

## துணிவிநியோகத்தில் பாரபட்சம்

யாழ்ப்பாணம், புதன்

தீவுப்பகுதி சமாஜத்திற்கு வந்துள்ள 606 யார் ஜப்பான் துணியை, சில்லறையாக கேட்டவர்களுக்கு கொடுக்காமல் தங்களுக்கு விரும்பியவர்களுக்குமட்டும் விற்பனை செய்யப்பட்டதை யிட்டு பொதுமக்கள் காரியாதிகாரிக்கு முறைப்பாடு செய்தார்கள்.

காரியாதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து பரிசோதனை செய்த பொழுது 122 யார் சில்லறையாக விற்கப்பட்டதாக கணக்கு காட்டப்பட்டதாகவும், துணி வாங்கியிருப்பவர்களுடைய குடியிருப்பு விலாசங்களுடன் விபரம் தருமாறு காரியாதிகாரி கேட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

மீதியாக உள்ள துணியை ஐக்கிய வண்டி சாலையில் லொத்தர் மூலம் விற்பனை செய்யும்படி காரியாதிகாரி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சில்லறையாக விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் 122 யார் துணியையும் மொத்த விற்பனைப்பகுதிமூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## சமயக்கல்வி

யாழ்ப்பாணம், வியா.

"சமயக்கல்வியே ஒருவன் தனது வாழ்க்கையை நன்கு அமைப்பது. ஆகவே கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும் சமயபாடபோதனையில் ஆசிரியர்கள்கூடிய அக்கறை காட்டவேண்டும்" என திருநெல்வேலியில் நடைபெற்ற பிரதேச விடுமுறைகள் ஆண்டு விழாவில் திருநெல்வேலி கிராமசேவையாளர் திரு. நா. சிவசிதம்பரம் பேசுகையில் தெரிவித்தார்.

## வீதிகளைத்திருத்த நடவடிக்கை

கோண்டாவில், புதன்

கோண்டாவில் மிஷன் பாடசாலை வீதியையும் அரசடிப்பிள்ளையார் கோவில் வீதியையும் திருத்துவதற்காக பொது வேலைப்பகுதியினர் கொக்குவில் கிராமசபையிடமிருந்து மேற்படி இரு வீதிகளையும் பொறுப் பேற்றுக் கொண்டனர்.

## "பஸ் சேவையை விஸ்தரிக்குக"

அளவெட்டி, புதன்

மாவிட்டபுரம் காங்கேசன்துறை மக்களின் பிரயாணக் கஷ்டங்களை நீக்க, யாழ்ப்பாணம் - தெல்லிப்பழைக்குச் சேவையில் ஈடுபட்டுள்ள பஸ் சேவையை காங்கேசன்துறைக்கும் விஸ்தரிக்கும்படி வழை வீமன்காமம் கிராமமுன்னேற்றச்சங்கம் யாழ். இலங்கைப்போக்குவரத்துச்சபை அதிபட்சகரைக் கேட்டுள்ளது.

## இளம் விவசாயிகள் கழகம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், வியா

"உலக ஆராய்ச்சியாளர்களின் முடிவின்படி நமது இலங்கையில்வாழும் மக்களில் சுமார் 75 வீதமான மக்கள் போஷாக்குச் சக்தி அற்றவர்களாகவே இருக்கின்றார்கள் எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இதனை நிவர்த்திசெய்ய வீட்டுத்தோட்டம் ஓரளவு உதவி செய்யும்.

மேற்கண்டவாறு திருநெல்வேலி இந்துவாலிபர் சங்க மண்டபத்தில் இளம் விவசாயிகள் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப்பேசுகையில் விவசாய உத்தியோகஸ்தர் திரு. எஸ். வீரசிங்கம் குறிப்பிட்டார்.

இளம் விவசாயிகள் கழகத்தலைவராக யாழ்ப்பாணம் அரசாங்க செயலக சமூக சேவை நிர்வாக உதவியாளரான திரு எஸ். சிவசிதம்பரமும், உபதலைவராக திரு. எஸ். கிருஷ்ணசாமியும் செயலாளராக திரு. எஸ். திருநாவுக்கரசுவும், உபசெயலாளராக திரு எஸ். இலட்சுமிகாந்தனும், பொருளாளராக திரு எஸ். வாமதேவாவும் தெரியப்பட்டதோடு 7 பேரைக்கொண்ட நிர்வாகக்கமிட்டியொன்றும் தெரியப்பட்டது. (ந. நி.)

## பிரிவுபசாரம்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை நகரசபையில் சோலைவரிப்பகுதியில் லிகிதராகக்கடமையாற்றிய திரு. ஆ. க. தனிநாயகம் வல்வெட்டித்துறை பட்டினசபைக்கு இடமாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு பருத்தித்துறை நகரசபை ஊழியர்களால் ஒரு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி பட்டினசபை அலுவலகத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு. எஸ். விஜய பாஸ்கரன் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அன்னாரின் சேவையைப் பாராட்டிச் சக ஊழியர்களால் பிரிவுபசாரமொன்று அளிக்கப்பட்டது. இப்பிரிவுபசார விழாவிற்கு நெல்லியடி பட்டினசபையின் விசேஷ ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார்.

## ஏமாற்றம்

பளை, புதன்

புலோப்பளை பனைநோக்கு கூட்டுறவுச் சங்கம் சந்தைத் தினத்தன்று முன் அறிவித்தலின்றி மூடப்பட்டதால் மக்கள் கப்பல் அரிசி வாங்காமல் வெறுங்கையுடன் வீடு திரும்பினர்.

## "பொதுச் சந்தை வேண்டும்"

கோண்டாவில், வியா

கொக்குவில் கிராமசபையின் வருமானத்தை பெருக்கக் கூடியதாக கோண்டாவில் பலாலி வீதியில் ஒரு சந்தையை அமைத்துத்தரும்படி கொக்குவில் கிராமச்சபை சம்பந்தப்பட்ட இலாகாக்களையும் தலைவரையும் கோரியுள்ளது. அண்மையில் நடைபெற்ற கொக்குவில் கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் திரு. சு. சற்குணநாதனால் பிரேரிக்க திரு. சி. இரத்தினசிங்கத்தால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

## மண்டாவால் குத்தப்பட்டாராம்

சாவகச்சேரி, புதன்

கே. நல்லதம்பி என்பவர் மண்டாவினால் குத்தப்பட்டு அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் கிளிநொச்சியில் நடந்துள்ளது. கடந்த 14ம் திகதி இரவு கே. நல்லதம்பியும் இவரது மகன் கந்தப்பு என்பவரும் திண்ணையிலிருக்கும்போது சின்னவன் நற்குணம், பெரியான் முருகானந்தன், வைரவன் சின்னவன் ஆகிய மூவரும் ஒழித்து நின்று நல்லதம்பியை மண்டாவினால் குத்தி கந்தப்புவை அடித்ததாகக் கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக விசாரணை நடாத்திய கிளிநொச்சிப் பொலிஸ் சார்ஜன்ட் திரு ரீ ரத்தினசபாபதி சின்னவன் நற்குணம், பெரியான் முருகானந்தன், வைரவன் சின்னவன் ஆகியமூவரையும் கைது செய்து நேற்றுக்காலை சாவகச்சேரி நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. ரூபேட் சில்வா முன்னிலையில் ஆஜர் செய்தபோது மாஜிஸ்திரேட் சந்தேக நபர்கள் மூவரையும் தலா ரூபா 800 பிணையில் செல்ல அனுமதித்து மேல்விசாரணையை இம்மாதம் 16-ம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

## சாரணர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணத்திலுள்ள அரசினர் பாடசாலைகள் சாரணர்களுக்கான வேலைப் பயிற்சிகள், நேற்று முதல் யாழ்ப்பாணத்திலுள்ள அனேக பாடசாலைகளிலும் ஆரம்பமாகியுள்ளன.

வடமாநில கல்வி அதிகாரி திரு. எஸ். தணிகாசலம் அறிவித்ததைத் தொடர்ந்தே இப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. இன்றுடன் இவ்வகுப்புகள் முடிவடையும்.

அரசாங்க செயலகத்தில் இன்று நடைபெறவிருக்கும் சாரணர் பயிற்சி வகுப்புகளுக்கும் எல்லாச் சாரணர்களையும் கலந்துகொள்ளும்படியும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. (ந. நி.)

## லைசென்ஸ் ரத்து

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட மாடு, ஆட்டிறைச்சிக் கடைகளின் லைசென்ஸ் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. பாவனையாளரின் பல புகார்களைத் தொடர்ந்தே இந்த லைசென்சுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பளை, புதன்

அரிசி விலை உயர்வினால் இங்குள்ள சாப்பாட்டுக் கடைகளில் சாப்பாட்டுக்கு மிகவும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவ்வாரம் இங் [illegible]

# "வெற்றிப் பாதையில் இலங்கைப்படங்கள்"

## தமிழ்ப்பட டைரக்டர் பெருமிதம்

யாழ்ப்பாணம், வியா.

"இலங்கை நடிகர்களைக் கொண்டு இலங்கையிலேயே தயாராகும் படங்களுக்குக் கிடைத்திருக்கும் ஆதரவு, இத்துறையில் ஈடுபாடு கொண்டிருக்கும் கலைஞர்களுக்கும் மற்றையோருக்கும் உற்சாக மளிக்கக்கூடியதாக இருக்கிறது. "டாக்ஸி ட்ரைவருக்கு" கிடைத்திருக்கும் ஆதரவு அடுத்த தமிழ்ப் படத்தை ஆரம்பிப்பதற்கு வழிவகுத்துள்ளது" என்று நேற்றுமுன்தினம் ராணி தியேட்டரில் "டாக்ஸி ட்ரைவர்" திரைப்பட இடைவேளையின்போது மேடையில் நேரில் காட்சியளித்துப் பேசிய டைரக்டர் திரு. சோமசேகரன் கூறினார்.

"பணம் சம்பாதிக்க வேண்டும். வீடுகட்டவேண்டும். கோடீஸ்வரனாக வாழவேண்டும் என்ற நோக்கம் எமக்குக் கிடையாது. இலங்கையிலும் வெற்றிப் படங்கள் தயாரித்து எமது கலாசாரத்தை வளர்க்கவேண்டுமென்பதே எமது இலட்சியமாகும். தமிழ் மக்கள் அளித்திருக்கும் வரவேற்பு ஆதரவு இலங்கையிலும் தரமான தமிழ்ப்படங்களைத் தயாரித்து எமக்கு தைரியத்தைக் கொடுத்திருக்கிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

நகைச்சுவை நடிகர் பாலன் பேசுகையில், இலங்கைத் திரைப்படத்துக்கு யாழ்ப்பாண மக்கள் அளித்திருக்கும் ஆதரவு எமக்கு பெருமையளிக்கிறது என்று கூறினார். வேறுபலரும் பேசினர்.

## இந்திய தேர்தல் அரங்கு

### மனுத்தாக்கல்

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்வது, வருகிற 16-ந் திகதி திங்கட்கிழமை தொடங்குகிறது. தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் எதிர்வரும் 13-ந் திகதி வெள்ளிக்கிழமை முதல் மனுத்தாக்கல் செய்யவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் 13-ந் திகதி ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு, 14-ந்திகதிக்குப்பின்போடப்பட்டது. ஆனால் 14-ந் திகதி பொங்கல் விடுமுறையானபடியால் இப்போது 16-ந் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

ஃ

### கந்தல் துணி!

மதுரையில் பிரதமர் இந்திரா காந்தி பேசியகூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் காமராஜரும் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் எதிர்ப்பு அணியைக் கடுமையாகத் தாக்கினார். "எதிர்ப்பு அணி கந்தல் துணிகளை ஒன்றாகத் தைத்தது போன்றது. ஒரு சலவைக்குப்போய் வந்தால் அது கிழிந்துவிடும்" என்றார் அவர்.

ஃ

### வெற்றி உறுதி!

"மட சென்னை பார்லிமெண்ட் தொகுதியில் நான் வெற்றி பெறுவது உறுதி" என்று தி. மு. க. பிரமுகர் நாஞ்சில் மனோகரன் கூறினார்.

ஃ

### போர்ப்படை!

"காங்கிரஸ் ஆட்சியை அகற்றும் போர்ப்படையாக எதிர்ப்பு அணி அமைந்துள்ளது" என்று 'நாம் தமிழர்' தலைவர் ஆதித்தனார் கூறினார்.

ஃ

### விசுவாசப் பிரமாணம்

'தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், தேர்தல் அதிகாரியின் முன்னிலையில் விசுவாசப் பிரமாணம் எடுக்கவேண்டும்' என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஃ

### தடைசெய்க!

"ஜனசங்கத்தைத் தடை செய்யவேண்டும்" என்று சென்னையில் நடைபெற்ற [illegible] கழக மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## காதல் ஜோடியை காணவில்லை

யாழ்ப்பாணம், வியா.

காணாமல் போனதாகக் கூறப்படும் இளம் காதல் ஜோடிகளைக் கண்டு பிடிப்பதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவராமலிங்கம், (22 வயது) இதேஇடத்தைச் சேர்ந்த இட்டினர் சந்திரா (15 வயது) ஆகிய இவர்களைத்தான் காணவில்லையாம். கடந்த திங்கட்கிழமை அடுக்ககைக்குச் சென்ற சந்திராவின் தாயார் காங்கேசன்துறைப் பொலிஸில் செய்துள்ள புகாரில், தனது மகளுக்கும் சிவராமலிங்கத்துக்கும் இடையில் தொடர்பிருந்து வந்ததாகவும், அவனுடனேயே மகள் ஓடிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதுசம்பந்தமாக அவர்கள் சென்றதாகக் கூறப்படும் காரொன்றையும் பொலிசார் தேடுகின்றனர்.

## வெண்கட்டி தயாரித்தனர்

புத்தளம், புதன்

புத்தளம் வட்டார வித்தியாதிகாரி திரு ஜீ டபிள்யூ. எம். டீ. சில்வாவும் புத்தளம் சென்ற் அன்றூஸ் மகாவித்தியாலய பதில் அதிபர் திரு. ஏ. டபிள்யூ. ஏக்கநாயக்காவும் உப்பிலிருந்து கழிவாகும் பொருளில் இருந்து தரமான வெண்கட்டிகளைத் தயாரித்துள்ளனர்.

தச்சுவேலை, நெசவுவேலை போல வெண்கட்டி செய்வதையும் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கமுடியுமென்றும் அரசாங்கம் இத்துறைக்கு அதற்குரிய உபகரணங்களை கொடுத்துதவுமானால் குடிசைக்கைத்தொழிலாக மக்களுக்கு வளர்க்கலாம் என்றும் நமது நிருபரிடம் வித்தியாதிகாரி கூறினார்.

## சிரமதான மூலம் பாதை அமைப்பு

புத்தளம், புதன்

புத்தளம் நகரசபை எல்லையை அடுத்துள்ள தில்லையடி, கடந்த மூன்று வருடமாக நடைபெற்ற விஸ்தரிப்புத்திட்டத்தின் கீழ் புத்தளம் நகரசபையுடன் இணைக்கப்பட்டது. பாதைகள் இன்னும் திருத்தப்படவில்லை. ஆனந்த வித்தியாலய மாணவர்கள், இங்குள்ள பாதைகளை திருத்தியமைக்க முன்வந்துள்ளனர். இம்மகா வித்தியாலய மாணவர்கள் புத்தளம் பௌத்த நிலையத்துக்குரிய கட்டட அத்திவாரக் கல் நாட்டுவதற்காக காணியை வெட்டித் துப்புரவு செய்யும் பொறுப்பையும் ஏற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், கிரா

யாழ்ப்பாணம் அர்ச். நிக்கலஸ் பி பிரிவு உதைபந்தாட்ட கோஷ்டிக்கும் ஆனைக்கோட்டை யூனியன் இளந் உதைபந்தாட்ட பி பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யூனியன் இளைஞர் 4-1 கோல்களால் வெற்றி பெற்றனர்.

அர்ச். பேதுரு ஏ பிரிவு வீரர்களுக்கும், ஆனைக்கோட்டை யூனியன் இளைஞர் ஏ பிரிவு வீரர்களுக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் அர்ச் பேதுரு கோஷ்டியினர் 3-1 கோல்களால் வெற்றியீட்டினர்.

ஆனைக்கோட்டை யூனியன் இளைஞருக்கும், யாழ் றேஞ்சர்ஸ் இளைஞருக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் யூனியன் இளைஞர் 2-1 கோல்களால் வென்றனர். இப்போட்டிகளுக்கு திரு. எம். மேரின்மநாயகம் மத்தியஸ்தம் வகித்தார். (நநி)

## விக்ரர் வென்றது

யாழ்ப்பாணம், வியா

பாஷையூர் புதிய குருப்பிரசாதிகளை வணக்கத்துக்குரிய பிதா திரு. கே. பி. சந்தியாபிள்ளையை வரவேற்றுக் கௌரவிக்குமுகமாக பாஷையூர் வண. பிதா யோசப் வாஸ்கோஸ் கோஷ்டியினருக்கும், வண. பிதா விக்றர் கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வண. பிதா விக்ரர் கோஷ்டியினர் 3-1 கோல்களால் வெற்றியீட்டினர். இப்போட்டிக்கு திரு ஆர். மகாராசா மத்தியஸ்தம் வகித்தார். (நநி)

## தாச்சிப் போட்டி

சங்கானை, புதன்

சங்கானை ஸ்ரீபாரதி சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் அளவெட்டி சனசமூக நிலைய கோஷ்டிக்குமிடையில் தாச்சிப் போட்டி ஸ்ரீபாரதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் பாரதி சனசமூக நிலையத்தினர் 2—0 வழிகளால் அளவெட்டிக் கோஷ்டியினரை வென்றனர். இப்போட்டிக்கு தி... மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## சங்கிலியன் வென்றான்

சங்கானை, புதன்

சங்கிலியன் விளையாட்டுக் கழகத்திற்கும் மாதகல் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி வண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் சங்கிலியன் 3—1 புள்ளிகளால் வெற்றி பெற்றது. மாதகல் கோஷ்டிக்கு க. மகேந்திரனும், சங்கிலியனுக்கு சீ. பத்மநாதனும் தலைமை தாங்கினர். மத்தியஸ்தராக திரு எஸ். அரியரத்தினம் கடமையாற்றினார்.

## சங்கிலியன் தோற்றான்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் "கிறீன் பீக்" விளையாட்டுக் கழகத்திற்கும் வண்டத்தரிப்பு சங்கிலியன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் யாழ். விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் [illegible] 2—1 கோல்களால் சங்கிலியனைத் தோற்கடித்தது.

எல்லோரும்
விரும்பிக்
கேட்பது
யானை மார்க்
கிறீம்
சோடா




நுரை பொங்கும்
இனிய
யானை மார்க்
கிறீம்
சோடாவை
அருந்தினால்தான்
அதன் சுவையை
உணரமுடியும்!

CCS
எலிபன்ட் ஹவுஸ்
கொழும்பு

GRANTS 130

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'வேலை நாட்களை கூட்டுவதால் கல்வித்தரம் உயராது'

## ஆசிரியர்சங்கங்கள் மகஜர்

யாழ்ப்பாணம், வியாழன் பாடசாலை நாட்களை அதிகரிப்பதால் பாடசாலை வேலைநேரம் அதிகரிப்பதாகவும் இது ஆசிரியத் தொழிலின் சிரமங்களையும் தொல்லைகளையும் அதிகரிப்பதாகவும் இது ஆசிரியர் மாணவர் ஆகிய இருசாராரையும் பாதிப்பதாகவும் தெரிவிக்கு மகஜரொன்றை வடமாகாண ஆசிரியர் சங்கம், வட இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம், வட இலங்கை அரசினர் தமிழ் ஆசிரியர் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களும் கல்வி மந்திரிக்கு அனுப்பிவைக்கவிருக்கின்றன.

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட இந்த மூன்று சங்கங்களும் தாம் அனுப்பவிருக்கும் மகஜரில் ஆசிரியர்கள் மீது சுமத்தப்படும் மேலதிக வேலைக்கு, அதாவது ஆசிரியசேவைக்குப் புறம்பாகச் செய்யப்படும் கடமைகளுக்கு மேலதிக வேதனத்தை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஆசிரியர் சம்பளத்திருத்தம் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுக்குமாறு இந்த மகஜரில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திலிருந்து

# தமிழ்க்காங்கிரஸ் வெளியேறாது

## கமிட்டியோசனையை ஜீ. ஜீ. நிராகரித்தார்

கொழும்பு, செவ்வாய்

தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழ்க்காங்கிரஸ் வெளியேறிவிடவேண்டுமென்ற யோசனையை தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம். பி.யுமான திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் நிராகரித்துவிட்டதாகத் தெரியவருகிறது. தமிழ்க்காங்கிரஸின் கமிட்டிக் கூட்டம் நேற்று மாலை திரு. பொன்னம்பலத்தின் இல்லத்தில் நடைபெற்றபோதே 'வெளியேறவேண்டும்' என்ற யோசனையை திரு. பொன்னம்பலம் நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

பொன்னம்பலம் நேற்று மாலை தமது இல்லத்தில் நடந்த காங்கிரஸின் கமிட்டிக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த கமிட்டி அங்கத்தினர்களும் உடுப்பிட்டி எம். பி.யும் கலந்து கொண்டார்.

இன்றுள்ள நிலையில் தேசிய அரசாங்கத்தில் தமிழ்க் காங்கிரஸ் தொடர்ந்து அங்கம் வகிப்பது நல்லதல்லவென்றும் இச்சமயத்தில் அரசாங்கத்திலிருந்து காங்கிரஸ் வெளியேறுவது வருங்காலத்தில் காங்கிரஸின் வளர்ச்சிக்குப் பெரும் உதவியாக இருக்குமென்று கமிட்டி அங்கத்தினர் சிலர் யோசனை தெரிவித்தனர்.

அரசாங்கத்திலிருந்து காங்கிரஸ் வெளியேற வேண்டுமென, திரு.பொன்னம்பலம் வெளிநாட்டில் இருக்கையில் காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிவைத்திருந்ததாகக் கூறப்படும் தீர்மானப் பிரதியும் நேற்றைய கமிட்டிக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாம்.

திரு. பொன்னம்பலம் இதை விரும்பாததைக் கண்ட சிலர், அரசாங்கத்திலிருந்து வெளியேறினாலும் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சிகளுக்கு உதவியளிக்காதிருக்கலாமென்றும் யோசனை தெரிவித்தனராம்.

எனினும் இன்றைய நிலையில் அரசாங்கத்தைவிட்டு வெளியேறுவது விவேகமல்ல என்று திரு. பொன்னம்பலம் கூறி அந்த யோசனையை நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

---

### உணவுப் பங்கீடு

மானிப்பாய், செவ்வாய்

மானிப்பாயிலுள்ள சங்கக்கடைகளும், அனுமதிபெற்ற கூப்பன்கடைகளும் இன்று தொடக்கம் கூப்பனுக்கு நபரொருவருக்கு ஒரு றாத்தல் மாவு, முக்கால் அவுன்ஸ் மல்லி, அரை அவுன்ஸ் மிளகாய், ஒரு அவுன்ஸ் சர்க்கரை வழங்கும்.

### மல்லாகம்நீதி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

#### எதிரிகள் விடுதலை

காங்கேசன்துறைப்பொலிசாரால் பன்னிரண்டு குற்றங்கள் சாட்டித் தொடரப்பட்ட ஒரு கிழக்கோர்ட் விசாரணையின்பின் மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். திருச்செல்வம் ஆறு எதிரிகளையும் விடுதலைசெய்துள்ளார்.

இவ்வழக்கில் காங்கேசன்துறை வறணியைச் சேர்ந்த கந்தன் நாகமணி, மயிலிட்டியைச் சேர்ந்தவர்களான கந்தன் செல்லன், அருள் பொன்னன், தையிட்டியைச் சேர்ந்த முதலி முத்துராசா, வறணியைச் சேர்ந்தவர்களான கந்தன் சுந்தரம், பொன்னன் இரத்தினம் ஆகிய ஆறு பேரும் சட்ட விரோதமாகப் பயங்கர ஆயுதங்களுடன் கூட்டம் கூடி ஐ. சின்னமணியை வெட்டியும் அடித்தும் காயம் விளைவித்ததாகவும், எம். வேலன், ஐ. தவம் ஆகிய இருவருக்கும் அடித்துக்காயம் விளைவித்ததாகவும், 12 குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தனர்.

எதிரிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா ஆஜராகியிருந்தார்.

வழக்கு எதிரிகள் மீது குற்றமேற்றும் நோக்குடன் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக மல்லாகம் நீதிபதி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சியத்தில் பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்திற்கு முரண்பாடு இருந்ததால் நீதிபதி விசாரணையை நிறுத்தி எதிரிகளை விடுதலை செய்தார். வழக்காளி மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று நீதிபதி தெரிவித்தார்.

#### கரந்தன் கொலை வழக்கு

உரும்பராய் கரந்தன் கொலை முடிவில் இரண்டரை மாதமாகியும் இன்னும் பொலிசார் சந்தேக நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் நீதிபதி ஐந்து சந்தேக நபர்

திருகோணமலைக் கடிதம்

# உழைப்பால் உயரும் திருமலை இளைஞர்கள்

நமது நிருபர்

திருக்கோணமலையிலுள்ள படித்த இளைஞர்களில் சிலர் ஒரு புதிய முயற்சியில் ஈடுபட்டு, உழைத்துவருகின்றனர். நூற்றுக்கு மேலான இந்த இளைஞர்கள் இங்கிருந்து பன்னிரண்டு மைல்களுக்கப்பாலுள்ள வேப்பங்குளம் என்னுமிடத்தில் இலவசமாக ஐந்து ஏக்கர் நிலம் பெறுவதற்காக உழைத்து வருகின்றனர். "வேப்பங்குளம் படித்த இளைஞர் திட்டம்" என்று உருவாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் இந்த இளைஞர்கள்

ஒன்றுகூடி அங்குள்ள பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களுள் ஒரு சிலர் கடந்த ஒன்பது மாதங்களாகவும் அங்கு பயிற்சிபெற்று வருகின்றனர். இங்குள்ள காணிகளில் நெற்பயிர்ச்செய்கையும், புகையிலை உற்பத்தியும் செய்யப்படுகின்றன. நெற்பயிர்கள் விளைந்தபோது நெற்கதிர்கள் தள்ளி செழிப்பான முறையில் காணப்படுகின்றது. இப்பிரயோசனங்களுள் பெறப்படும் வருமானம் இந்த இளைஞர்களுக்கே பகிர்ந்துகொடுக்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

போயாதினமும் அதற்கு முந்திய தினத்தில் அரைநாளும்வார இறுதிவிடுமுறை தினங்களாகும். இந்த நாட்களில் இத்தொழிலாளிகள் தத்தம் வீடுகளுக்குச்சென்று விட்டுத் திரும்பவும் வேலைக்கு வந்துவிடுவர். இவர்களுக்குத் தினமும் வேதனம் கிடைகின்றது. இதனுள் பயிற்சிபெறுவதோடு மட்டுமல்லாமல். காணி இலவசமாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் கிட்டுவதோடு, உழைப்புக்கான வேதனமும் கிடைக்கின்றது.

இவைபெல்லாவற்றிற்கும் மேலாக இவர்கள் பயிற்சி நிலையத்திலுள்ள விடுதிச்சாலையில் மிகவும் குதூகலமாக வாழ்வது யாவருக்கும் மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கின்றது. சாதி, மத, பேதமின்றி உயர்வு தாழ்வு பாராட்டாது எல்லோரும் ஓர் இனம் என்ற ரீதியில் குதூகலமாக வாழ்கின்றனர்.

இந்த 'படித்த இளைஞர் திட்டம்' வேப்பங்குளத்தில் பயிற்சிபெறும் இளைஞர்களில் ஒருவரை எமது நிருபர் சந்தித்துப் பேட்டிகண்டபோது, அவர் மிகவும் உற்சாகத்தோடு 'நாம் படித்தவர்களாக இருந்தும் உத்தியோகங்களில் எங்களுக்கு நாட்டமில்லை. நாம் உழைக்கப் பிறந்தவர்கள். பிறர் முன் கைகட்டி நிற்கும் தொழிலைவிட சுதந்திரமாக கமத்தொழிலில் ஈடுபட்டு நாட்டுக்கும் நமக்குமாகப் பாடுபடுவோம்' என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார்.

கணையும் மறு அறிவித்தல் வரை கோர்ட்டிற்கு வர வேண்டாம் என அறிவித்துள்ளார்.

உரும்பராய் கரந்தனைச் சேர்ந்த காரியர் செல்லப்பா சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் 19-ம் திகதி முன்னிரவில் சுட்டுக்கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக புலன்விசாரணை செய்த சுன்னாகம் பொலிசார் சந்தேகத்தின்பேரில் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான பண்டாரி முருகன், பண்டாரி நாமுத்தன், பண்டாரி இனியவன், வைத்தி சிவராசபதி, சாரிச்சாரதியான வைரமுத்து இராசதுரை ஆகிய ஐவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

#### தாக்குதல் வழக்கு

இளவாலையைச் சேர்ந்தவர்களான சுவாம்பிள்ளை சின்னத்தம்பி, சுவாம்பிள்ளை பொன்னு, வைத்திலிங்கம் அருளப்பு, வைத்திலிங்கம் சூசைப்பிள்ளை ஆகிய நால்வரும் சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் என்பவரைப் பொல்லால் அடித்தும், கத்தியால் வெட்டியும் கொலைசெய்ய முயன்றதாக அச்சங்களைப்பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி மேல் விசாரணையை ... தினத்துக்கு ... ஒத்திவைத்தார்.

### பெயிரா குளம் மீட்டவேலை

கொழும்பு, புதன்

கொழும்பு பெயிரா குளத்தின் பிரயோசனமற்ற பகுதியை மீட்பது பற்றி நீர்ப்பாசன டைரக்டரிடமிருந்து காணி, நீர்ப்பாசன, மின்சக்திமந்திரி திரு சி.பி.டி சில்வா அறிக்கை ஒன்றினைக் கோரியுள்ளார்.

பெயிராக்குளம் 175 ஏக்கர் விஸ்தீரண முள்ளது. இதில் 50 ஏக்கரை மட்டும் கப்பல் தங்கும் துறையாகவும், வாய்க்கால்களாகவும் விட்டு விட்டு, மீதி 125 ஏக்கரையும் மீட்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டையில் ஒருஏக்கர் காணி 10லட்சம் ரூபாய் பெறுமதியாக இருக்கின்றது என்ற தற்போதைய கணிப்பைப் பின்னணியாக வைத்தே, இந்த மீட்பு வேலை ஆலோசிக்கப்பட்டுள்ளது.

### "சிங்கள ஆசிரியர் வேண்டும்"

வர்காவற்றுறை, புதன்.

சிங்களம் படிப்பிப்பதற்காக இங்குள்ள பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை நயினாதீவுக் கிராமசபை நிறைவேற்றியுள்ளது. சபைத்தலைவர் திரு.க. தம்பையா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

### ஆஸ்பத்திரி சோதனைக் குழு

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த ஆஸ்பத்திரி சோதனைக்குழுவினர் நேற்றையதினம் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்குத் திடீரெனச்சென்று சோதனை நடத்தினார்கள். இவ்வாரமுடிவுக்குள் இச்சோதனைக்குழுவினர் யாழ்ப்பாணமாவட்டத்திலுள்ள எல்லா அரசினர் ஆஸ்பத்திரிகளுக்கும் சென்று சோதனை செய்வார்கள் என்று தெரிகின்றது. (ந.நி)

---

### இன்றுசுவீப் இழுப்பு

கொழும்பு, புதன்

124-வது சுவீப்இழுப்பு நாளை வியாழக்கிழமை அனவையில் நடைபெறும் இந்த சுவீப்பில் இதுவரை 13 லட்சம் டிக்கட்டுகள் விற்பனையாகியுள்ளன.

முதல் டிக்கட்டை உணவு மந்திரி திரு. எம்,டி. பண்டாவும் இரண்டாவதை இழுப்பை தம்பதெனியா எம்.பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்காவும் இழுப்பார்கள்.

---

### கூப்பனுக்கு மல்லி

பண்டு, புதன்.

கடந்த இரண்டு மாதத்தின் பின்னர் வன்னிப்பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடையில் கூப்பனுக்கு முக்கால் றாத்தல் மல்லி கொடுக்கப்பட்டது.

### பெண்உட்பட எண்மர் கைது

#### பொலிஸார் திடீர் பரிசோதனை

மாவிட்டபுரம், செவ்

சுன்னாகம் பொலிசார் இன்று மல்லாகம், அளவெட்டி, இணுவில், உரும்பராய், ஊரெழு ஆகிய இடங்களில் திடீர்ப்பரிசோதனை நடத்தியதில் வெடிமருந்து, வடிசாராயம், சிகரெட், கோடா ஆகியபொருள் களைக்கைப்பற்றினர். ஒரு பெண்மணி உட்பட எட்டுப்பேரையும் பொலிசார் பாதுகாப்பில் வைத்தனர்.

---

### டட்லி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தி இலங்கைக்கு உதவியளிக்க ஒப்புக்கொண்டுள்ள நாடுகளுக்கும் பிரதமர் விஜயஞ்செய்வாரென்றும், இலங்கைக்கு அளிக்க ஒப்புக்கொண்ட உதவியைத் துரிதமாக அளிக்குமாறு அந்நாடுகளை அவர் கேட்டுக்கொள்வாரென்றும் தெரிகிறது.

இலங்கைக்கு இதுவரை கனடா பெருமளவு உதவியளித்திருக்கிறது. கட்டுநாயக்கா விமானநிலையம் திருத்தியமைக்கப்பட்டு வருவதும் கனடாவின் உதவியுடன்தான். கனடா இலங்கைக்கு நன்கொடை உதவியளித்துவருகிறது. திருப்பிக் கொடுக்கவேண்டிய கடன் உதவியல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. கனடா அளித்துவரும் உதவிகளுக்காகக் கனடா அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் பிரதமர் நேரில் நன்றி தெரிவிக்க இருக்கிறார்.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org